# வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் மாதாந்த பொதுக்கூட்ட அறிக்கை 2025.06.27

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் முதலாவது மாதாந்த கூட்டம் கௌரவ தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் அவர்களின் தலைமையில் 2025.06.27 ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 09.30 மணிக்கு தலைமையலுவலக சபா மண்டபத்தில் ஒரு நிமிட மௌன வணக்கத்துடன் ஆரம்பமானது. அவ்வேளையில் கீழ்காணும் கௌரவ உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் ஆகியோர் சமூகமாயிருந்தனர்.

1. கௌரவ உறுப்பினர் வித்தியா கிருபாகரன்
2. கௌரவ உறுப்பினர் இரத்தினம் அனுஷா
3. கௌரவ உறுப்பினர் சந்திரன் தயானி
4. கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர்
5. கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன்
6. கௌரவ உறுப்பினர் துறைராஜா காளிதாஸ்
7. கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன்
8. கௌரவ உறுப்பினர் பத்மநாதன் சாருஜன்
9. கௌரவ உறுப்பினர் பாலச்சந்திரன் லஜிதரன்
10. கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் ரொசாந்தகுமார்
11. கௌரவ உறுப்பினர் கந்தசாமி மனோகரராசா
12. கௌரவ உறுப்பினர் கருணாகரன் கஜகரன்
13. கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன்
14. கௌரவ உறுப்பினர் பென்சமின் தனராஜா
15. கௌரவ உறுப்பினர் சிவசுப்பிரமணியம் சீத்தா
16. கௌரவ உறுப்பினர் சுரேகா கோகுலன்
17. கௌரவ உறுப்பினர் பாலசுப்பிரமணியம் சிறிதரன்
18. கௌரவ உறுப்பினர் வன்னியசிங்கம் பிரபாகரன்
19. கௌரவ உறுப்பினர் ஜெகதீஸ்வரி சுதர்சன்
20. கௌரவ உறுப்பினர் கந்தசாமி ஜெயரூபமூர்த்தி
21. கௌரவ உறுப்பினர் மேகலா திருஞானசம்பந்தர்
22. கௌரவ உறுப்பினர் முத்தலிப் ரகுநாதன்
23. கௌரவ உறுப்பினர் குலத்துங்கம் வில்வராசா
24. கௌரவ உறுப்பினர் ஐயாத்துரை மதூசன்
25. கௌரவ உப தவிசாளர் பொன்னுத்துரை தங்கராசா
26. கௌரவ உறுப்பினர் சுகீர்த்தனா ரவிச்சந்திரன்
27. கௌரவ உறுப்பினர் சிறிய அனிக்கிலீஸ் பிறேம்ஸ்ரலன்
28. கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயறாஜ்
29. கௌரவ உறுப்பினர் தர்மலிங்கம் முரளிதரன்
30. கௌரவ உறுப்பினர் வயிரவன் தங்கவேல்
31. கௌரவ உறுப்பினர் தேவச்சந்திரன் வஜிந்தன்
32. கௌரவ உறுப்பினர் யோசேவ் மரியதாசன் யோசெவ் இதயராஜ்
33. கௌரவ உறுப்பினர் இராசேந்திரம் மிதுஷன்

- கௌரவ தவிசாளர் அவர்கள் தனது தலைமையுரையிலே இன்றைய சபையின் அமர்வுக்கு வருகைதந்துள்ள சபையினுடைய கௌரவ உப தவிசாளர் மற்றும் சபையின் கௌரவ உறுப்பினர்கள், செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் காலை வணக்கத்தை தெரிவித்து எமது புதிய சபையினுடைய அமர்வு இன்று ஆரம்பமாகும் நேரத்தில் எங்கள் முன்னாலே பல சவால்கள் நிறைந்த நிலைமையிலே நாங்கள் இச் சபையை பொறுப்பெடுத்து இருக்கின்றோம். உள்ளூராட்சி மன்ற சட்ட அடிப்படையில் இன்று தவிசாளர்,உப தவிசாளர், உறுப்பினர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து எமது பிரதேச சபையின் அபிவிருத்திக்காக செயற்படவே உள்ளூராட்சி மன்றங்கள் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கின்றது. பாராளுமன்றம் மற்றும் மாகாண சபைகள் போல இங்கு ஆளும்கட்சி,எதிர்கட்சி என்ற பேதம் ஏதும் இல்லை சட்ட ஏற்பாடுகளும் அவ்வாறே காணப்படுகின்றது என்றும் அவ்வாறே நாங்களும் ஒற்றுமையாக செயற்பட வேண்டும் என்றும் தெரிவித்தார். எமது பிரதேசத்திலே எங்களுக்கு இருக்கின்ற சவால்களாக எங்களுடைய மக்கள் இன்னும்

2400 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகளில் மீளக்குடியேற அனுமதிக்கப்படவில்லை எனவும் அவர்களை மீள்குடியேற்றுவதற்கான அனைத்து செயற்பாடுகளையும் செய்வதற்கு அனைவரது ஒத்துழைப்பும் தேவை எனவும் சபையின் அனேக

உறுப்பினர்கள் இன்னும் தங்கள் சொந்த நிலத்தில் மீளக்குடியமராமல் காணப்படுகின்றார்கள் எனவும் மக்கள் விடுவிக்கப்படாத தமது சொந்த நிலங்களுக்கு சென்று அவர்கள் தங்களுடைய இயல்பான வாழ்க்கையை வாழ்வதற்கு நாங்கள் அவர்களுக்கான சொந்த நிலங்களினை பெற்று கொடுப்பதோடு அந்த பிரதேசத்தினுடைய மீள்குடியேற்றத்தினை தொடர்ந்து நடைபெறுகின்ற அபிவிருத்தித்திட்டங்களையும் நாங்கள் ஒன்றிணைந்து மேற்கொள்ள வேண்டிய தேவைப்பாடு காணப்படுகின்றது என்றும் தெரிவித்தார். கடந்த சித்திரை மாதம் மீள்குடியேற்ற அமைச்சினால் 182 மில்லியனுக்கு மேற்பட்ட நிதிகள் ஒதுக்கப்பட்டிருந்த போதும் அதற்கான வேலைத்திட்டங்கள் இன்னும் ஆரம்பிக்கப்படாமல் காணப்படுகின்றது. மேலும் அதற்கான மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்படாத நிலையிலும் இருக்கின்ற காரணத்தினால் நாங்கள் சபையினை புதிதாக பொறுப்பெடுத்த பின்னர் அதை விரைவுபடுத்த வேண்டிய தேவைப்பாடும் காணப்படுகின்றது என்த் தெரிவித்தார்.

- மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியினூடாக பல திட்டங்களையும் முன்னெடுக்க வேண்டிய தேவைப்பாடும் காணப்படுகின்றது. மேலும் சபையின் வரவு செலவுத் திட்டத்தினுடாக செய்யப்பட வேண்டிய பல அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் காணப்படுகின்றது. அதே போல எதிர்காலத்தில் இன்னும் எமது பிரதேசத்தில் செய்யப்பட வேண்டிய அபிவிருத்தித்திட்டங்களை சபையின் கௌரவ உறுப்பினர்கள் அடையாளப்படுத்தி அவற்றை முன்னுரிமை அடிப்படையில் சபையின் வருமானங்களை பெற்று செய்வதற்கான செயற்பாடுகளுக்கு தங்கள் அனைவரின் ஒத்துழைப்பையும் கேட்டுக் கொண்டு இன்று இவ் அமர்வினை ஆரம்பிக்கலாம் என தெரிவித்தார்.
- இன்றைய அமர்வுக்கு எமது கௌரவ உறுப்பினர் பொன்னம்பலம் இராசேந்திரம் அவர்கள் தன்னுடைய மகளின் திருமண நிகழ்வு காரணமாக சமூகமளிக்கமுடியாமல் இருப்பதனால் தனது விடுமுறையினை அனுமதிக்குமாறு கடித மூலம் அறியத்தந்துள்ளார். குறித்த கௌரவ உறுப்பினர் பொன்னம்பலம் இராசேந்திரம் அவர்களின் விடுமுறையினை அனுமதிப்பதற்கு கௌரவ தவிசாளர் சபைக்கு சமர்ப்பித்தார்.
- கௌரவ உறுப்பினர் பொன்னம்பலம் இராசேந்திரம் அவர்களின் விடுமுறையினை அனுமதிக்கலாமென கௌரவ உப தவிசாளர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் வன்னியசிங்கம் பிரபாகரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- அடுத்து நாங்கள் எமது சபையினால் ஆரம்பிக்கப்பட வேண்டிய சில சட்டமுறையான குழுக்களை உருவாக்க வேண்டிய தேவைப்பாடுகள் இருக்கின்றன. அதனைத் தொடர்ந்து எமது கௌரவ உறுப்பினர்களுடைய உரைகளுக்குச் செல்லலாம் என கௌரவ தவிசாளர் அவர்கள் தெரிவித்தார். அவ் அடிப்படையில் சபையினை பொறுப்பெடுத்த பின் சபையின் மேற்பார்வையின் கீழ் பின்வரும் அமைப்பு முறைகளை உருவாக்க வேண்டிய தேவைப்பாடுகள் காணப்படுகின்றன.

- 2025 ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவு திட்டத்தின் கீழ் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் சகல உத்தியோகத்தர்களுக்கும் ஊழியர்களுக்கும் அவர்களது மாதாந்த சம்பளங்கள், படிகள், வெளிவாரி அடிப்படையிலான ஊழியர்களின் கொடுப்பனவுகள், மேலதிக நேரக் கொடுப்பனவுகள், விடுமுறை நாட் கொடுப்பனவுகள், உத்தியோகத்தர்கள் அலுவலக கடமை தொடர்பாக மேற்கொள்ளப்படும் பிரயாணத்திற்கான நிலையான போக்குவரத்துபடிகள், வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான பிரயாணப்படிகள் என்பனவும் இளைப்பாற்று நயங்கள், விதவை அநாதை ஒய்வூதிய உதவு தொகைகள், ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், பண்டிகை, விசேட முற்பணங்கள், இடர் கடன் ஆகியவற்றை வழங்குவதற்கும் வேதன கழிவுகளை உரியவர்களுக்கு அனுப்பி வைப்பதற்கும் மற்றும் சில்லறை செலவுகளை மீளளித்தல், நூல் நிலையங்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் பத்திரிகைக் கொடுப்பனவுகள், அலுவலகங்கள், நூலகங்கள் ஆகியவற்றின்

*மின்கட்டணங்கள், அலுவலக தொலைபேசி கட்டணங்கள், வாடகைகள், வரிகள் ஆகிய செலவினங்களினை செய்வதற்கும் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் தவிசாளருக்கு அங்கீகாரம் வழங்குவதற்காகவும் இக்கொடுப்பனவுகள் தவிர ஏனைய செலவுகள் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பங்களில் ரூ.200,000.00க்கு உட்பட்டதாயின் தவிசாளரின் அங்கீகாரத்துடன் செலவினங்களினைச் செய்வதற்கும் கொடுப்பனவுகளினை மேற்கொள்வதற்கும் ரூ.200,000.00 க்கு மேற்பட்டதாயின்*

*நிதிக்குழுவினூடாக சபையில் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்று கொடுப்பனவு செய்வதற்கும் சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.*

***தீர்மான இல :- 01/2025.06.27***

*2025 ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவு திட்டத்தின் கீழ் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் சகல உத்தியோகத்தர்களுக்கும் ஊழியர்களுக்கும் அவர்களது மாதாந்த சம்பளங்கள், படிகள், வெளிவாரி அடிப்படையிலான ஊழியர்களின் கொடுப்பனவுகள், மேலதிக நேரக் கொடுப்பனவுகள், விடுமுறை நாட் கொடுப்பனவுகள், உத்தியோகத்தர்கள் அலுவலக கடமை தொடர்பாக மேற்கொள்ளப்படும் பிரயாணத்திற்கான நிலையான போக்குவரத்துபடிகள், வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான பிரயாணப்படிகள் என்பனவும் இளைப்பாற்று நயங்கள், விதவை அநாதை ஓய்வூதிய உதவு தொகைகள், ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், பண்டிகை, விசேட முற்பணங்கள், இடர் கடன் ஆகியவற்றை வழங்குவதற்கும் வேதன கழிவுகளை உரியவர்களுக்கு அனுப்பி வைப்பதற்கும் மற்றும் சில்லறை செலவுகளை மீளளித்தல், நூல் நிலையங்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் பத்திரிகைக் கொடுப்பனவுகள், அலுவலகங்கள், நூலகங்கள் ஆகியவற்றின் மின்கட்டணங்கள், அலுவலக தொலைபேசி கட்டணங்கள், வாடகைகள், வரிகள் ஆகிய செலவினங்களினை செய்வதற்கும் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் தவிசாளருக்கு அங்கீகாரம் வழங்குவதற்காகவும் இக்கொடுப்பனவுகள் தவிர ஏனைய செலவுகள் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பங்களில் ரூ.200,000.00க்கு உட்பட்டதாயின் தவிசாளரின் அங்கீகாரத்துடன் செலவினங்களினைச் செய்வதற்கும் கொடுப்பனவுகளினை மேற்கொள்வதற்கும் ரூ.200,000.00 க்கு மேற்பட்டதாயின் நிதிக்குழுவினூடாக சபையில் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்று கொடுப்பனவு செய்வதற்கும் அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உப தவிசாளர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.*

- *சட்ட ஏற்பாடுகளுக்கமைய மாதாந்த கூட்ட திகதியை முற்கூட்டியே தீர்மானிக்க வேண்டும் என்ற அடிப்படையில் மாதத்தின் மூன்றாவது வாரத்தில் வருகின்ற வியாழக்கிழமை நடாத்துவதற்கு சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.*

***தீர்மான இல :- 02/27.06.2025***
*சட்ட ஏற்பாடுகளுக்கமைய மாதாந்த கூட்ட திகதியை மாதத்தின் மூன்றாவது வாரத்தில் வருகின்ற வியாழக்கிழமை நடாத்துவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் பென்சமின் தனராஜா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் மேகலா திருஞானசம்பந்தர் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.*

- *2025ம் ஆண்டிற்கான சபையின் கொள்ளல் சபை,* Procurement Committee, Bid Evaluation Committee, Appeal Committee, Acceptance Committee, Variation Review Committee, *நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டமிடல் குழு,சுற்றாடல் தொழில்நுட்ப முன்னேற்ற மீளாய்வுக்குழு ஆகியவற்றிற்கு பின்வரும் உத்தியோகத்தர்களையும் மற்றும் சபை உறுப்பினர்களையும் நியமிப்பதற்கு சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.*

### கொள்ளல் சபை

*01.* திரு. சோ.சுகிர்தன் தவிசாளர், வலிகாமம் வடக்கு பிரதேசசபை - தலைவர்
*02.* திரு. சி.சிவானந்தன் செயலாளர், வலிகாமம் வடக்கு பிரதேசசபை – உறுப்பினர்
*03.* திருமதி த.இரவிச்சந்திரன் பி.மு.சே.உ வலிகாமம் வடக்கு பிரதேசசபை – உறுப்பினர்
*04.* திரு.ஸ்ரீ.கோபிநாத் தொழில்நுட்ப உத்தியோகத்தர் வலிகாமம் வடக்கு பிரதேசசபை, உறுப்பினர்.
*05.* திருமதி குணசாந்தினி மயூரன் மு.சே.உ வலிகாமம் வடக்கு பிரதேசசபை. உறுப்பினர்

### பெறுகைக்குழு

*01.* திரு. சோ.சுகிர்தன் தவிசாளர், வலிகாமம் வடக்கு பிரதேசசபை - தலைவர்
*02.* திரு. சி.சிவானந்தன் செயலாளர், வலிகாமம் வடக்கு பிரதேசசபை – உறுப்பினர்
*03.* திரு.இ.சுகர்ணன் தொழில்நுட்ப உத்தியோகத்தர் - வலிவடக்கு பிரதேசசபை.
*04.* மேலும் இரு சபை உறுப்பினர்கள்

### Bid Evaluation Committee

*01.* எந்திரி U.தனசிறி கட்டங்கள் திணைக்களம் வ.மா - தலைவர்
*02.* எந்திரி ஆ.அபிராஜ் இயந்திரப் பொறியியலாளர் வ.மா - தலைவர்
*03.* திரு. R.ரகுராம் மின் அத்தியட்சகர் மின்சார சபை காங்கேசன்துறை. தலைவர்
*04.* திரு.S.சுரேந்திரராஜ் அபிவிருத்தி உத்தியோகத்தர் பி.பி.செ. அலுவலகம் - திட்டமிடல் - தலைவர்.
*05.* திரு.S.சடகோபன் அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதம செயலாளர் செயலகம் வ.மா தலைவர்
*06.* திரு.W.போல் கிறிஸ்ரன் வேலைகள் அத்தியட்சகர், பி.உ.உ.ஆ அலுவலகம் யாழ்ப்பாணம் - உறுப்பினர்
*07.* சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர். – உறுப்பினர்.

### Appeal Committee

01. எந்திரி சு.சுரேஸ்குமார் - யாழ் மாநகர சபை – தலைவர்
02. திரு.அ.பிரதீபன் - செயலாளர் வலிகாமம் தெற்கு பி.சபை – உறுப்பினர்
03. திருமதி.இ.தவரஞ்சினி – பி.மு.சே.உ வ.வ.பி.ச . உறுப்பினர்.

### Acceptance Committee

1. திரு.சோ.சுகிர்தன் -தவிசாளர், வலிகாமம் வடக்கு பி.ச - தலைவர்
2. திரு.சி.சிவானந்தன் -செயலாளர், வலிகாமம் வடக்கு பி.ச. - உறுப்பினர்
3. திரு.இ.சுகர்ணன் -தொழில்நுட்ப உத்தியோகத்தர் -வ.வ.பி.ச - உறுப்பினர்
4. பொருத்தமான வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர்களில் ஒருவர் - வ.வ.பி.ச உறுப்பினர்
5. பொருத்தமான சபை உறுப்பினர்கள் - ஒருவர் - உறுப்பினர்

### Variation Review Committee

1. எந்திரி P. திவாகரன் பிரதம பொறியியலாளர் அலுவலகம் - தலைவர்.
2. திரு.இ.சுகர்ணன் தொழில்நுட்ப உத்தியோகத்தர் - உறுப்பினர்.
3. சபையின் ஏனைய தொழில்நுட்ப உத்தியோகத்தரில் ஒருவர் - உறுப்பினர்

### நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டமிடல் குழு

1. திரு.சோ.சுகிர்தன் -தவிசாளர் -வ.வ.பி.ச
2. திரு.சி.சிவானந்தன் -செயலாளர் -வ.வ.பி.ச
3. திரு.ப.சிவசீலன் - அமுலாக்கல் உத்தியோகத்தர் -நகர அபிவிருத்தி அதிகார சபை.
4. திரு.செ.வசீகரன் - பொறுப்பதிகாரி - மல்லாகம் உப அலுவலகம்
5. திரு.சி.ரங்கதாஸ் - பொறுப்பதிகாரி - தெல்லிப்பளை உப அலுவலகம்

6. திரு.நா.விஜேந்திரன் - பொறுப்பதிகாரி - மயிலிட்டி உப அலுவலகம்
7. திரு.செ.அன்ரன் பிரான்சிஸ் - பொறுப்பதிகாரி - காங்கேசன்துறை உப அலுவலகம்
8. திரு.ஸ்ரீ.இம்றான் - தொழில்நுட்ப உத்தியோகத்தர் -வ.வ.பி.ச
9. திரு.இ.ரசினி - தொழில்நுட்ப உத்தியோகத்தர் -வ.வ.பி.ச
10. திரு.ச.தர்சிந்தன் - தொழில்நுட்ப உத்தியோகத்தர் -வ.வ.பி.ச
11. திரு.ஸ்ரீ.கோபிநாத் - தொழில்நுட்ப உத்தியோகத்தர் -வ.வ.பி.ச
12. செல்வி. சி.வர்சிகா – முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் -வ.வ.பி.ச

**சுற்றாடல் தொழில்நுட்ப முன்னேற்ற மீளாய்வுக் குழு**

1. திரு.சோ.சுகிர்தன் -தவிசாளர் -வ.வ.பி.ச
2. திரு.சி.சிவானந்தன் -செயலாளர் -வ.வ.பி.ச
3. சுகாதார வைத்திய அதிகாரி / பொது சுகாதாரப் பரிசோதகர்
4. திருமதி.S.சுதாமதி - சுற்றாடல் அதிகாரசபை உத்தியோகத்தர்
5. திரு.கி.திலீப்குமார் - சுற்றாடல் விடய பொறுப்பு உத்தியோகத்தர்
6. வருமான பரிசோதகர்

**தீர்மான இல :- 03/27.06.2025**

1. 2025ம் ஆண்டிற்கான சபையின் கொள்ளல் சபை, Procurement Committee, Bid Evaluation Committee, Appeal Committee, Acceptance Committee, Variation Review Committee, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டமிடல் குழு,சுற்றாடல் தொழில்நுட்ப முன்னேற்ற மீளாய்வுக்குழு ஆகியவற்றிற்கு பின்வரும் சபை உத்தியோகத்தர்களையும் சபையின் உறுப்பினர்களையும் நியமிப்பதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ்அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் வயிரவன் தங்கவேல் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கொள்ளல் சபை**

01. திரு. சோ.சுகிர்தன் தவிசாளர், வலிகாமம் வடக்கு பிரதேசசபை - தலைவர்
02. திரு. சி.சிவானந்தன் செயலாளர், வலிகாமம் வடக்கு பிரதேசசபை – உறுப்பினர்
03. திருமதி த.இரவிச்சந்திரன் பி.மு.சே.உ வலிகாமம் வடக்கு பிரதேசசபை – உறுப்பினர்
04. திரு.ஸ்ரீ.கோபிநாத் தொழில்நுட்ப உத்தியோகத்தர் வலிகாமம் வடக்கு பிரதேசசபை. - உறுப்பினர்.
05. திருமதி குணசாந்தினி மயூரன் மு.சே.உ வலிகாமம் வடக்கு பிரதேசசபை. உறுப்பினர்

**பெறுகைக்குழு**

01.திரு. சோ.சுகிர்தன் தவிசாளர், வலிகாமம் வடக்கு பிரதேசசபை - தலைவர்

02. திரு. சி.சிவானந்தன் செயலாளர், வலிகாமம் வடக்கு பிரதேசசபை – உறுப்பினர்

03.திரு.இ.சுகர்ணன் தொழில்நுட்ப உத்தியோகத்தர் -வலிவடக்கு பிரதேசசபை– உறுப்பினர்

04. கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் - உறுப்பினர்

05. கௌரவ உறுப்பினர் இராசேந்திரம் மிதுஷன் - உறுப்பினர்.

## Bid Evaluation Committee

*01. எந்திரி U.தனசிறி கட்டங்கள் திணைக்களம் வ.மா - தலைவர்*
*02. எந்திரி அ.அபிராஜ் இயந்திரப் பொறியியலாளர் வ.மா - தலைவர்*
*03. திரு. R.ரகுராம் மின் அத்தியட்சகர் மின்சார சபை காங்கேசன்துறை. தலைவர்*
*04. திரு.S.சுரேந்திரராஜ் அபிவிருத்தி உத்தியோகத்தர் பி.பி.செ. அலுவலகம் - திட்டமிடல் - தலைவர்.*
*05. திரு.S.சடகோபன் அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதம செயலாளர் செயலகம் வ.மா தலைவர்*
*06. திரு.W.போல் கிறிஸ்ரன் வேலைகள் அத்தியட்சகர், பி.உ.உ.ஆ அலுவலகம் யாழ்ப்பாணம் உறுப்பினர்*
*07. சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர். உறுப்பினர்.*

## Appeal Committee

*01. எந்திரி சு.சுரேஸ்குமார் - யாழ் மாநகர சபை – தலைவர்*

*02.திரு.அ.பிரதீபன் - செயலாளர் வலிகாமம் தெற்கு பி.சபை – உறுப்பினர்*

*03. திருமதி.இ.தவரஞ்சினி – பி.மு.சே.உ வ.வ.பி.ச . உறுப்பினர்.*

## Acceptance Committee

1. திரு.சோ.சுகிர்தன் -தவிசாளர், வலிகாமம் வடக்கு பி.ச தலைவர்
2. திரு.சி.சிவானந்தன் -செயலாளர்,வலிகாமம் வடக்கு பி.ச. - உறுப்பினர்
3. திரு.இ.சுகர்ணன் -தொழில்நுட்ப உத்தியோகத்தர் -வ.வ.பி.ச - உறுப்பினர்
4. பொருத்தமான வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர்களில் ஒருவர் - வ.வ.பி.ச உறுப்பினர்
5. பொருத்தமான வட்டார கௌவர உறுப்பினர் - ஒருவர் - உறுப்பினர்

## Variation Review Committee

1. எந்திரி P. திவாகரன் பிரதம பொறியியலாளர் அலுவலகம் - தலைவர்.
2. திரு.இ.சுகர்ணன் தொழில்நுட்ப உத்தியோகத்தர். – உறுப்பினர்
3. சபையின் ஏனைய தொழில்நுட்ப உத்தியோகத்தரில் ஒருவர் - உறுப்பினர்

## நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டமிடல் குழு

*01. திரு.சோ.சுகிர்தன் -தவிசாளர் -வ.வ.பி.ச*
*02. திரு.சி.சிவானந்தன் -செயலாளர் -வ.வ.பி.ச*
*03. திரு.ப.சிவசீலன் - அமுலாக்கல் உத்தியோகத்தர் -நகர அபிவிருத்தி அதிகார சபை.*
*04. திரு.செ.வசீகரன் - பொறுப்பதிகாரி - மல்லாகம் உப அலுவலகம்*
*05. திரு.சி.ரங்கதாஸ் - பொறுப்பதிகாரி - தெல்லிப்பளை உப அலுவலகம்*
*06. திரு.நா.விஜேந்திரன் - பொறுப்பதிகாரி - மயிலிட்டி உப அலுவலகம்*
*07. திரு.செ.அன்ரன் பிரான்சிஸ் - பொறுப்பதிகாரி - காங்கேசன்துறை உப அலுவலகம்*
*08. திரு.ஸ்ரீ.இம்றான் - தொழில்நுட்ப உத்தியோகத்தர் -வ.வ.பி.ச*
*09. திரு.இ.ரசினி - தொழில்நுட்ப உத்தியோகத்தர் -வ.வ.பி.ச*
*10. திரு.ச.தர்சிந்தன் - தொழில்நுட்ப உத்தியோகத்தர் -வ.வ.பி.ச*
*11. திரு.ஸ்ரீ.கோபிநாத் - தொழில்நுட்ப உத்தியோகத்தர் -வ.வ.பி.ச*
*12. செல்வி. சி.வர்சிகா – முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் -வ.வ.பி.ச*

**சுற்றாடல் தொழில்நுட்ப முன்னேற்ற மீளாய்வுக் குழு**

1. திரு.சோ.சுகிர்தன் -தவிசாளர் -வ.வ.பி.ச
2. திரு.சி.சிவானந்தன் -செயலாளர் -வ.வ.பி.ச
3. சுகாதார வைத்திய அதிகாரி / பொது சுகாதாரப் பரிசோதகர்
4. திருமதி.S.சுதாமதி - சுற்றாடல் அதிகாரசபை உத்தியோகத்தர்
5. திரு.கி.திலீப்குமார் - சுற்றாடல் விடய பொறுப்பு உத்தியோகத்தர்
6. வருமான பரிசோதகர்

- 2025.06.27 ஆம் திகதி தொடக்கம் சபையின் நிதி மற்றும் கொள்கை உருவாக்கக்குழு, வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்திக் குழு, தொழில்நுட்ப சேவைகள் குழு, சுற்றாடலும் வாழ் வசதிகளும் குழு, இளைஞர்கள் பெண்கள் சிறுவர்கள் பாதுகாப்புக் குழு மற்றும் கலாச்சாரம் பண்பாட்டு விளையாட்டு குழு ஆகிய உப குழுக்களுக்கான உறுப்பினர்கள் தெரிவு இடம்பெற்றது.

**தீர்மான இல :- 04/2025.06.27**
நிதி மற்றும் கொள்கை உருவாக்கக்குழு உறுப்பினர்களாக பின்வரும் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

**நிதி மற்றும் கொள்கை உருவாக்கக்குழு**

1. கௌரவ தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன்
2. கௌரவ உப தவிசாளர் பொன்னுத்துரை தங்கராசா
3. கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன்
4. கௌரவ உறுப்பினர் சிறிய அனிக்கிலீஸ் பிறேம்ஸ்ரலன்
5. கௌரவ உறுப்பினர் கந்தசாமி ஜெயரூபமூர்த்தி
6. கௌரவ உறுப்பினர் சிவசுப்பிரமணியம் சீத்தா
7. கௌரவ உறுப்பினர் பாலசுப்பிரமணியம் சிறிதரன்

மேற்படி உறுப்பினர்களை நிதி மற்றும் கொள்கை உருவாக்கக்குழு உறுப்பினர்களாக நியமிக்கலாம் என கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் ரொசாந்தகுமார் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மான இல :- 05/2025.06.27**
வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்திக் குழு உறுப்பினர்களாக பின்வரும் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

**வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்திக் குழு**

1. கௌரவ உறுப்பினர் தேவச்சந்திரன் வஜிந்தன்
2. கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர்
3. கௌரவ உறுப்பினர் பாலச்சந்திரன் லஜிதரன்
4. கௌரவ உறுப்பினர் கருணாகரன் கஜகரன்
5. கௌரவ உறுப்பினர் மேகலா திருஞானசம்பந்தர்
6. கௌரவ உறுப்பினர் சுரேகா கோகுலன்

மேற்படி உறுப்பினர்களை வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்திக் குழு உறுப்பினர்களாக நியமிக்கலாம் என கௌரவ உறுப்பினர் துறைராஜா காளிதாஸ் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கந்தசாமி ஜெயரூபமூர்த்தி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மான இல :- 06/2025.06.27**
தொழில்நுட்ப சேவைகள் குழு உறுப்பினர்களாக பின்வரும் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

**தொழில்நுட்ப சேவைகள் குழு**

1. கௌரவ உறுப்பினர் ஐயாத்துரை மதூசன்
2. கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன்
3. கௌரவ உறுப்பினர் வன்னியசிங்கம் பிரபாகரன்
4. கௌரவ உறுப்பினர் பத்மநாதன் சாருஜன்
5. கௌரவ உறுப்பினர் சுகீர்த்தனா ரவிச்சந்திரன்
6. கௌரவ உறுப்பினர் ஜெகதீஸ்வரி சுதர்சன்
7. கௌரவ உறுப்பினர் துறைராஜா காளிதாஸ்

மேற்படி உறுப்பினர்களை தொழில்நுட்ப சேவைகள் குழு உறுப்பினர்களாக நியமிக்கலாம் என கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சிவசுப்பிரமணியம் சீத்தா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மான இல :- 07/2025.06.27**
சுற்றாடலும் வாழ் வசதிகளும் குழு உறுப்பினர்களாக பின்வரும் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

**சுற்றாடலும் வாழ் வசதிகளும் குழு**

1. கௌரவ உறுப்பினர் குலத்துங்கம் வில்வராசா
2. கௌரவ உறுப்பினர் பென்சமின் தனராஜா
3. கௌரவ உறுப்பினர் முத்தலிப் ரகுநாதன்
4. கௌரவ உறுப்பினர் தர்மலிங்கம் முரளிதரன்
5. கௌரவ உறுப்பினர் வயிரவன் தங்கவேல்
6. கௌரவ உறுப்பினர் சந்திரன் தயானி
7. கௌரவ உறுப்பினர் கந்தசாமி மனோகரராசா

மேற்படி உறுப்பினர்களை சுற்றாடலும் வாழ் வசதிகளும் குழு உறுப்பினர்களாக நியமிக்கலாம் என கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் இராசேந்திரம் மிதுஷன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மான இல :- 08/2025.06.27**
இளைஞர்கள் பெண்கள் சிறுவர்கள் பாதுகாப்புக் குழு உறுப்பினர்களாக பின்வரும் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

**இளைஞர்கள் பெண்கள் சிறுவர்கள் பாதுகாப்புக் குழு**

1. கௌரவ உறுப்பினர் இரத்தினம் அனுஷா
2. கௌரவ உறுப்பினர் சுரேகா கோகுலன்
3. கௌரவ உறுப்பினர் வித்தியா கிருபாகரன்
4. கௌரவ உறுப்பினர் மேகலா திருஞானசம்பந்தர்
5. கௌரவ உறுப்பினர் தேவச்சந்திரன் வஜிந்தன்
6. கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் ரொசாந்தகுமார்
7. கௌரவ உறுப்பினர் இராசேந்திரம் மிதுஷன்

மேற்படி உறுப்பினர்களை இளைஞர்கள் பெண்கள் சிறுவர்கள் பாதுகாப்புக் குழு உறுப்பினர்களாக நியமிக்கலாம் என கௌரவ உறுப்பினர் சிறிய அனிக்கிலீஸ் பிறேம்ஸ்ரலன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பத்மநாதன் சாருஜன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மான இல :- 09/2025.06.27**
கலாச்சாரம் பண்பாட்டு விளையாட்டு குழு உறுப்பினர்களாக பின்வரும் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

**கலாச்சாரம் பண்பாட்டு குழு**

1. கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயறாஜ்
2. கௌரவ உறுப்பினர் சிவசுப்பிரமணியம் சீத்தா
3. கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன்
4. கௌரவ உறுப்பினர் பாலசுப்பிரமணியம் சிறிதரன்
5. கௌரவ உறுப்பினர் யோசேவ் மரியதாசன் யோசெவ் இதயராஜ்
6. கௌரவ உறுப்பினர் சுகீர்த்தனா ரவிச்சந்திரன்
7. கௌரவ உறுப்பினர் இரத்தினம் அனுஷா
8. கௌரவ உறுப்பினர் சுரேகா கோகுலன்

மேற்படி உறுப்பினர்களை கலாச்சாரம் பண்பாட்டு விளையாட்டு குழு உறுப்பினர்களாக நியமிக்கலாம் என கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் ரொசாந்தகுமார் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பத்மநாதன் சாருஜன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் பின்வரும் பொருட்களை பெறப்பட்ட உத்தேச மதிப்பீட்டிற்கமைய கொள்வனவு செய்வதற்கான சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

    1. Desktop Computer – 03 (Unit Cost – 300,000.00)
    2. Laptop - 02 (Unit Cost – 300,000.00)
    3. Photo Copy Machine - 01 (Unit Cost – 600,000.00)

**தீர்மான இல :- 10/2025.06.27**
அலுவலக பாவனைக்காக பின்வரும் பொருட்களை பெறப்பட்ட உத்தேச மதிப்பீட்டிற்கமைய கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் தர்மலிங்கம் முரளிதரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயறாஜ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1. Desktop Computer – 03 (Unit Cost – 300,000.00)
2. Laptop - 02 (Unit Cost – 300,000.00)
3. Photo Copy Machine - 01 (Unit Cost – 600,000.00)

- சபையின் மின்னியலாளரான திரு.பா.சோஜிந்தன் தான் மின்சார கம்பங்களில் ஏறி வீதி விளக்கினை பொருத்துவது தனது உயிருக்கு ஆபத்தானது என கடிதம் சமர்பித்துள்ளார் என்பது சபையின் அறிவுறுத்தலுக்காக சமர்ப்பிக்கப்படுகின்றது. எனவே வீதி விளக்கினை பொருத்தும் நடவடிக்கையினை துரிதப்படுத்த வேண்டியுள்ளதனால் வீதி விளக்கினை பொருத்துவதற்கு அனுபவம், தகைமை மற்றும் விருப்பம் கொண்ட அலுவலர் ஒருவரை வெளிவாரி அடிப்படையில் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரின் சிபாரிசிற்கமைய சனசமூகநியைத்தினூடாக பெற்றுக்கொள்வதற்காக சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.
    - கௌரவ உறுப்பினர் பத்மநாதன் சாருஜன், கௌரவ உறுப்பினர் பென்சமின் தனராஜா, கௌரவ உறுப்பினர் இராசேந்திரம் மிதுஷன் குறித்த வீதி விளக்குள் பொருத்துவதன் அவசியத் தேவைகளையும் கருத்துக்களையும் தெரிவித்து வெளிவாரி அடிப்படையில் ஊழியர் ஒருவரை நியமிக்கலாமெனவும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 11/2025.06.27**
சபையின் வீதி விளக்கினை பொருத்தும் நடவடிக்கையினை துரிதப்படுத்த வேண்டியுள்ளதனால் வீதி விளக்கினை பொருத்துவதற்கு அனுபவம், தகைமை மற்றும் விருப்பம் கொண்ட அலுவலர் ஒருவரை வெளிவாரி அடிப்படையில் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரின் சிபாரிசிற்கமைய சனசமூகநிலைத்தினூடாக பெற்றுக்கொள்வதற்காக அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- சபையின் பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் வாகனத்தரிப்பிடங்கள் என்பன 2025ம் ஆண்டிற்கு கேள்வி கோரப்பட்டு தற்போது கேள்வி கோரப்படாத சந்தைகள், கடைகள் என்பனவற்றின் விபரங்களும் மற்றும் தற்போது கேள்வி கோரப்படவுள்ள தொகைகளின் விபரங்கள் சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள்,கருவாட்டுக்கடைகள் வாகனத்தரிப்பிடங்கள் என்பன 2025 ஆம் ஆண்டிற்காக கேள்வி அறிவித்தல் கோரப்பட்ட விபரங்கள்

| தடவை | கேள்வி விபரம் | காலம் | கேள்வி அறிவித்தல் திகதி | கேள்வி திறக்கப்பட்ட திகதி |
|---|---|---|---|---|
| 1 | 1வது கேள்வி | 01.01.2025-31.12.2025 | 09.10.2024 | 23.10.2024 |
| 2 | 1வது மீள் கேள்வி | 01.01.2025-31.12.2025 | 29.10.2024 | 12.11.2024 |
| 3 | 2வது மீள் கேள்வி | 01.01.2025-31.12.2025 | 27.11.2024 | 11.12.2024 |
| 4 | 1வது உள்ளூர் கேள்வி | 01.01.2025-31.12.2025 | 21.12.2024 | 30.12.2024 |
| 5 | 2 வது உள்ளூர் கேள்வி | 04.02.2025-31.12.2025 | 27.01.2025 | 03.02.2025 |
| 6 | 1 வது பகிரங்க ஏலம் | 10.05.2025-31.12.2025 | 02.05.2025 | 08.05.2025 |
| 7 | 2 வது பகிரங்க ஏலம | 01.06.2025-31.12.2025 | 19.05.2025 | 26.05.2025 |

7 தடவைகள் கேள்வி கோரியும் இதுவரை எடுக்கப்படாத பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள்,கருவாட்டுக்கடைகளின் இறுதியாக கோரப்பட்ட விபரம்

| | | **மாத வாடகை** | **ஆகக் குறைந்த கேள்வித் தொகை** | **கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது)** |
|---|---|---|---|---|
| **மல்லாகம் உப அலுவலகம்** | | | | |
| 01 | அளவெட்டி மலைவேம்படிச் சந்தை | - | 29,450.00 | 1,000.00 |
| 02 | அளவெட்டி மலைவேம்படி மாட்டிறைச்சிக் கடை | 1,500.00 | 210,000.00 | 5,000.00 |
| 03 | அளவெட்டி மலைவேம்படி பன்றிறைச்சிக் கடை | 1,000.00 | 105,000.00 | 1,000.00 |
| 04 | மல்லாகம் பொதுச்சந்தை | ...... | 63,640.00 | 1,000.00 |
| 05 | மல்லாகம் பொதுச்சந்தை கோழிக்கடை | 2,750.00 | 307,475.00 | 10,000.00 |
| 06 | இறால்மடம் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 1,250.00 | 330,150.00 | 10,000.00 |
| 07 | கணேஸ்வரம் சந்தை கோழிக்கடை | 1,000.00 | 33,000.00 | 1,000.00 |
| **தெல்லிப்பளை உப அலுவலகம்** | | | | |
| 01 | கூத்தன்சீமாச் சந்தை கருவாட்டுக்கடை | 1,050.00 | 8,670.00 | 1,000.00 |
| 02 | கீரிமலை மரக்கறிச்சந்தை | | 15,750.00 | 1,000.00 |
| 03 | வீமன்காமம் பொதுச்சந்தை கோழிக்கடை | 1,050.00 | 794,800.00 | 10,000.00 |
| 04 | வீமன்காமம் பொதுச்சந்தை கருவாட்டுக்கடை | 1,050.00 | 8,400.00 | 1,000.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| **மயிலிட்டி உப அலுவலகம்** | | | | |
| *01* | குரும்பசிட்டிச் சந்தை | ........... | 7,000.00 | 1,000.00 |
| **காங்கேசன்துறை உப அலுவலகம்** | | | | |
| *01* | காங்கேசன்துறை பொதுச்சந்தை | ......... | 40,900.00 | 1,000.00 |
| *02* | காங்கேசன்துறை சந்தை கோழிக்கடை | 1,200.00 | 44,850.00 | 1,000.00 |
| *03* | காங்கேசன்துறை சந்தை கருவாட்டுக்கடை இல - *01* | 1,200.00 | 34,650.00 | 1,000.00 |

இனிவரும் 6 மாதங்களுக்கு *(01.07.2025-31.12.2025)* பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் பின்வரும் தொகைகளில் கோரப்படவுள்ளது.

| **இல** | **குத்தகைவிபரம்**<br><br>**காலம் 01-07-2025-31.12.2025** | **மாத வாடகை** | **ஆகக் குறைந்த கேள்வித் தொகை** | **கேள்விப் பிணைப்ப ணம் (மீளளிக்கக் கூடியது)** |
|---|---|---|---|---|
| **மல்லாகம் உப அலுவலகம்** | | | | |
| *01* | அளவெட்டி மலைவேம்படிச் சந்தை | - | 25,245.00 | 1,000.00 |
| *02* | அளவெட்டி மலைவேம்படி மாட்டிறைச்சிக் கடை | 1,500.00 | 180,000.00 | 5,000.00 |
| *03* | அளவெட்டி மலைவேம்படி பன்றிறைச்சிக் கடை | 1,000.00 | 90,000.00 | 1,000.00 |
| *04* | மல்லாகம் பொதுச்சந்தை | ...... | 54,550.00 | 1,000.00 |
| *05* | மல்லாகம் பொதுச்சந்தை கோழிக்கடை | 2,750.00 | 263,550.00 | 10,000.00 |
| *06* | இறால்மடம் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 1,250.00 | 282,975.00 | 10,000.00 |
| *07* | கணேஸ்வரம் சந்தை கோழிக்கடை | 1,000.00 | 28,300.00 | 1,000.00 |
| **தெல்லிப்பளை உப அலுவலகம்** | | | | |
| *01* | கூத்தன்சீமாச் சந்தை கருவாட்டுக்கடை | 1,050.00 | 7,425.00 | 1,000.00 |
| *02* | கீரிமலை மரக்கறிச்சந்தை | | 13,500.00 | 1,000.00 |
| *03* | வீமன்காமம் பொதுச்சந்தை கோழிக்கடை | 1,050.00 | 681,250.00 | 10,000.00 |
| *04* | வீமன்காமம் பொதுச்சந்தை கருவாட்டுக்கடை | 1,050.00 | 7,200.00 | 1,000.00 |
| **மயிலிட்டி உப அலுவலகம்** | | | | |
| *01* | குரும்பசிட்டிச் சந்தை | ........... | 4,000.00 | 1,000.00 |
| **காங்கேசன்துறை உப அலுவலகம்** | | | | |
| *01* | காங்கேசன்துறை பொதுச்சந்தை | ......... | 35,050.00 | 1,000.00 |
| *02* | காங்கேசன்துறை சந்தை கோழிக்கடை | 1,200.00 | 38,450.00 | 1,000.00 |
| *03* | காங்கேசன்துறை சந்தை மாட்டிறைச்சிக் கடை | 1,200.00 | 35,100.00 | 1,000.00 |
| *04* | காங்கேசன்துறை சந்தை கருவாட்டுக்கடை இல - *01* | 1,200.00 | 29,700.00 | 1,000.00 |

- கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் மலைவேம்படி சந்தை இயங்க வில்லை என்றும் அதனை துப்பரவு செய்து மறுபடியும் இயங்க வைக்க சபை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயறாஜ் அவர்கள் சந்தைகளுக்கு அருகாமையில் மரக்கறி வியாபாரத்தை தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்தார். அவ்வாறு நடவடிக்கை எடுக்காவிட்டால் சந்தைகளை ஏலத்தில் வழங்குவது மிகவும் கடினமாக இருக்கும் என்றும் மற்றும் கோழிக்கடைகள் ஏலத்தில் கோரப்படாமல் இருப்பதற்கு காரணம் வெளி இடங்களில் கோழிக்கடை அதிகரித்துள்ளமையால் எனத் தெரிவித்தார்.

- கௌரவ உறுப்பினர் கருணாகரன் கஜகரன் அவர்கள் மல்லாகம் சந்தையின் முன்னால் வைத்து விற்கும் வாழைக்குலைகளை சந்தைக்குள் வைத்து விற்பதற்கு அறிவுறுத்தல் வழங்க வேண்டும் என்றும் மற்றும் சந்தைக்கு 500மீற்றர் சுற்றுவட்டாரத்தினுள் மரக்கறி விற்பவர்களுக்கு கடிதம் மூலம் விற்க வேண்டாம் என்று அறிவுறுத்தல் வழங்க வேண்டும். தவறும் சந்தர்ப்பத்தில் தண்டப்பணம் அறவீடு செய்யலாம் என்றும் கூறினார். மற்றும் வர்த்தக சங்கங்களினை உருவாக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன் அவர்கள் வியாபாரம் செய்பவர்களின் வாழ்வாதாரம் பாதிக்காத வண்ணம் அவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கி அவர்களை சந்தைக்குள் வியாபாரம் நடத்துவதற்கான வழிகாட்டல் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும் எனவும் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் பென்சமின் தனராஜா அவர்கள் மல்லாகம் சந்தையின் கேள்வி விலையினை குறைத்து கோரப்படும் சந்தர்ப்பத்தில் சந்தையில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏதுவாக இருக்கும் எனவும் தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் கூறுகையில் சபையின் சில சந்தைகள் இன்னும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்றும் மற்றும் சபையில் தீர்மானித்தால் சந்தையில் இருந்து 500 மீற்றருக்குள் மரக்கறி வியாபாரம் செய்ய முடியாது என்று இருப்பதனை சபையில் 1KM தூரமாக மாற்ற முடியும் எனவும் கூறினார். மற்றும் சந்தையின் கேள்வி அறிவித்தலை உள்ளூர் கேள்வி கோரலாகவும் சந்தைகளை கௌரவ உறுப்பினர்கள் ஆகிய தாங்கள் சந்தைகளுக்கு வெளியே வியாபாரம் செய்யும் மக்களுக்கு தெரியப்படுத்தி அவர்களை சந்தையினுள் வியாபார நடவடிக்கையினை மேற்கொள்ள ஊக்கப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

**தீர்மான இல :- 12/2025.06.27**

*எமது சபையின் பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் வாகனத்தரிப்பிடங்கள் இது வரை கேள்வி கோரப்படாத பின்வரும் சந்தைகள் உள்ளூர் கேள்வி அறிவித்தல் மூலம் 01.07.2025 – 31.12.2025 வரையான காலப்பகுதிக்கு கோருவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.*

| இல | குத்தகைவிபரம்<br>காலம் 01-07-2025-31.12.2025 | மாத வாடகை | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) |
|---|---|---|---|---|
| **மல்லாகம் உப அலுவலகம்** | | | | |
| 01 | அளவெட்டி மலைவேம்படிச் சந்தை | - | 25,245.00 | 1,000.00 |
| 02 | அளவெட்டி மலைவேம்படி மாட்டிறைச்சிக் கடை | 1,500.00 | 180,000.00 | 5,000.00 |
| 03 | அளவெட்டி மலைவேம்படி பன்றிறைச்சிக் கடை | 1,000.00 | 90,000.00 | 1,000.00 |
| 04 | மல்லாகம் பொதுச்சந்தை | ...... | 54,550.00 | 1,000.00 |
| 05 | மல்லாகம் பொதுச்சந்தை கோழிக்கடை | 2,750.00 | 263,550.00 | 10,000.00 |
| 06 | இறால்மடம் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 1,250.00 | 282,975.00 | 10,000.00 |
| 07 | கணேஸ்வரம் சந்தை கோழிக்கடை | 1,000.00 | 28,300.00 | 1,000.00 |
| **தெல்லிப்பளை உப அலுவலகம்** | | | | |
| 01 | கூத்தன்சீமாச் சந்தை கருவாட்டுக்கடை | 1,050.00 | 7,425.00 | 1,000.00 |
| 02 | கீரிமலை மரக்கறிச்சந்தை | | 13,500.00 | 1,000.00 |
| 03 | வீமன்காமம் பொதுச்சந்தை கோழிக்கடை | 1,050.00 | 681,250.00 | 10,000.00 |
| 04 | வீமன்காமம் பொதுச்சந்தை கருவாட்டுக்கடை | 1,050.00 | 7,200.00 | 1,000.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| **மயிலிட்டி உப அலுவலகம்** | | | | |
| *01* | குரும்பசிட்டிச் சந்தை | ........... | 4,000.00 | 1,000.00 |
| **காங்கேசன்துறை உப அலுவலகம்** | | | | |
| *01* | காங்கேசன்துறை பொதுச்சந்தை | ......... | 35,050.00 | 1,000.00 |
| *02* | காங்கேசன்துறை சந்தை கோழிக்கடை | 1,200.00 | 38,450.00 | 1,000.00 |
| *03* | காங்கேசன்துறை சந்தை மாட்டிறைச்சிக் கடை | 1,200.00 | 35,100.00 | 1,000.00 |
| *04* | காங்கேசன்துறை சந்தை கருவாட்டுக்கடை இல - *01* | 1,200.00 | 29,700.00 | 1,000.00 |

**தீர்மான இல :- 13/2025.06.27**

*எமது சபை எல்லைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள சந்தையில் இருந்து 1KM தூரத்துக்குள் மரக்கறிகள்,மீன்,கருவாடு, இறைச்சி வகை (கோழி,ஆடு,மாடு) விற்பனை செய்வதை தடைசெய்வதென கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் இராசேந்திரம் மிதுஷன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.*

- *தெல்லிப்பளை கிழக்கு தம்பையப்புலத்தை வசிப்பிடமாக கொண்ட திரு நா.கிருஸ்ணறூபன் அவர்கள் மல்லாகம் சந்தை கோழிக்கடையினை வரும் 6 மாதங்கள் நடாத்துவதற்கு ரூபா 200,000.00 ற்கு 2025.06.16 ஆம் திகதிய கடிதம் மூலம் கோரியுள்ளார். இவ் மல்லாகம் கோழிக்கடையின் 6 மாதத்திற்குரிய கேள்வித்தொகை 263,550.00 ஆக உள்ள நிலையில் குறித்த கோரிக்கை சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.*

**தீர்மான இல :- 14/2025.06.27**

*திரு நா.கிருஸ்ணறூபன் அவர்களின் கோரிக்கைக்கமைவாக மல்லாகம் சந்தை கோழிக்கடையினை வரும் 6 மாதங்களுக்கு ரூபா 200,000.00ற்கு வழங்குவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் பென்சமின் தனராஜா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கருணாகரன் கஜகரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.*

- கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் றொசாந்தகுமார் அவர்கள் பலாலியிலுள்ள சந்தைக்காணி மக்களின் பாவனைக்கு விடப்படல் வேண்டும் என்று தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் கந்தசாமி மனோகரராசா அவர்கள் அந்த காணி மக்கள் பாவனைக்காக விடப்பட்டுள்ளது என கூறினார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் அக்காணி இன்னும் விடுவிக்கப்படவில்லை என்றும் அதில் தங்கள் காணிகளை பார்வையிட வரும் பொதுமக்களின் பதிவினை பதிவதற்கு அக்காணியினை பயன்படுத்தி வருகின்றார்கள் எனவும் தெரிவித்தார். காணி உறுதி தற்பொழுது கிடைக்கப்பெற்றுள்ளதால் அதனை வைத்து காணி விடுவிப்பதற்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்றும் தற்போது புதிய யாழ்ப்பாண இராணுவ கட்டளைத் தளபதி நியமிக்கப்பட்டுள்ளார் எனவும் பலாலி சந்தை காணியை விடுவிப்பதற்கு யாழ்ப்பாண இராணுவ கட்டளைத் தளபதிக்கும் ஆளுநருக்கும் கடிதம் அனுப்புவதாக தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுமாறும் தெரிவித்தார். அதன் பிரகாரம் பின்வருமாறு சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மான இல :- 15/2025.06.27**

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் உயர்பாதுகாப்பு வலயத்தினுள் J/254 கிராம உத்தியோகத்தர் பிரிவில் காணப்படும் பலாலி சந்தையினை விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கௌரவ உறுப்பினர் கந்தசாமி மனோகரராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் ரொசாந்தகுமார் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- இத் தீர்மானத்தினை ஆளுநர், வடமாகாணம் மற்றும் யாழ்ப்பாண இராணுவ கட்டளைத் தளபதிக்கு கடித மூலம் தெரியப்படுத்தப்பட வேண்டுமென சபையின் கௌரவ உறுப்பினர்களால் தீர்மானிக்கப்பட்டது.

➢ எமது சபையின் முன்பள்ளியான நெய்தல் முன்பள்ளிக்கான காணி கொள்வனவினை விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டுக்கமைய கொள்வனவு செய்வது தொடர்பாக சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 16/2025.06.27**

எமது சபையின் முன்பள்ளியான நெய்தல் முன்பள்ளிக்கு விலைமதிப்பீட்டுத்திணைக்களத்தின் மதிப்பீட்டுக்கமைய காணியினை கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் வயிரவன் தங்கவேல் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் ரொசாந்தகுமார் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

➢ சபையின் வீதிகளுக்கு மும் மொழியிலான பெயர்ப்பலகையினை தனியாரின் அனுசரணையுடன் அல்லது சபையின் நிதி நிலைமையினை கருத்திற்கொண்டு இடுவதற்கு சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

- கௌரவ உறுப்பினர் பென்சமின் தனராஜா அவர்கள் வீதி சம்பந்தமாக சமூக ரீதியாக பெயர்கள் உள்ளன எனவும் ஆகவே யாழ்ப்பாணத்தில் வீதிகளுக்கு பெயர்ப்பலகை இடப்பட்டவாறு எமது சபையின் வீதிகளுக்கும் பெயர்ப்பலகைகள் இட வேண்டும் எனவும் தெரிவித்தார். மேலும் வட்டார உத்தியோகத்தர்கள் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் கிராம மக்களுடைய ஆலோசனையை பெற்று அந்தந்த வீதிகளுக்குரிய பெயர்களை பதிவு செய்யலாம். தொடர்ந்து குளமங்கால் ஒழுங்கையில் 2வது ஒழுங்கை 1960ம் ஆண்டில் இருந்து திருத்தப்படவில்லை அது பிரதேசசபையின் பதிவில் இல்லை என உள்ளூராட்சி ஆணையாளர் கடிதம் அனுப்பியுள்ளார் என்றும் கூறினார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் கூறுகையில் உங்கள் வட்டாரங்களில் பதியாமல் இருக்கும் வீதிகளை பதிவதாயின் அவ் வீதியில் உள்ள மக்களிடம் இவ் வீதியினை பிரதேச சபை வீதிகளாக பதிவதற்கு அவர்களிடம் ஒப்புதல் கடிதத்தினை பெற்றால் அவ் வீதியினை பதிவு செய்யலாம் எனத் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் இராசேந்திரம் மிதுஷன் அவர்கள் சில வட்டாரங்களுக்குரிய பெயர் பலகைகளினை மூன்று மொழிகளிலும் இடுவதற்கு பொது நிறுவனங்கள் மற்றும் பொது மக்களிடம் ஒத்துழைப்பினை பெற்றுத்தரலாம் எனத் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் கந்தசாமி ஜெயரூபமூர்த்தி அவர்கள் தமது வட்டாரத்தில் ஆதன மதிப்பீடுகள் செய்யும் போது கிராமப் பெயர்களை மாறி பதிந்து விட்டார்கள் எனவும் அதனால் தங்கள் பகுதிக்கு வரும் கடிதங்களில் கிராம பெயர்கள் மாறி வருகின்றன எனவும் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன் அவர்கள் வீதிகளில் பெயர் பலகை இடப்படும் போது அந்த வீதியில் உள்ள மக்களின் அபிப்பிராயங்களையும் கேட்டு அதற்கு பெயர்களை வைப்பது பொருத்தமானதாக இருக்குமெனவும் தெரிவித்தார்.
- வீதிகளின் பெயர் பலகைகளை தனியார் மற்றும் சபையின் நிதி பங்களிப்பில் செய்வதற்கு கௌரவ உறுப்பினர்களின் ஒத்துழைப்புகள் தேவையென தவிசாளர் அவர்கள் தெரிவித்தார்.

**தீர்மான இல :- 17/2025.06.27**

சபையின் வீதிகளுக்கு மும் மொழியிலான பெயர்ப்பலகைகளினை தனியாரின் அனுசரணையுடனும் அல்லது சபையின் நிதி நிலைமையினை கருத்திற்கொண்டு சபைநிதியில் பெயர்ப்பலகைகளினை இடுவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் இராசேந்திரம் மிதுஷன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பென்சமின் தனராஜா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- கௌரவ உறுப்பினர் சிறிய அனிக்கிலீஸ் பிறேம்ஸ்ரலன் அவர்கள் கும்பலை பாரதி சனசமூக நிலையம் 13 வருடங்களாக இயங்காமல் பழைய நிர்வாகத்துடனே இருக்கின்றதெனத் தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் இயங்காமல் இருக்கும் சனசமூக நிலையங்களினை சபையின் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தருடன் ஆலோசித்து இயங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.
- மேலும் சிறிய அனிக்கிலீஸ் பிறேம்ஸ்ரலன் அவர்கள் கும்பலை சந்தையானது தினசரி துப்பரவு செய்யப்படுவதில்லை என்றும் சந்தை இரவிலும் பூட்டப்படாமல் இருப்பதனால் சந்தையினை தவறாக பயன்படுத்துவற்கு வழிகோலும் எனவும் தெரிவித்தார். சந்தையில் சீல் செய்யப்படாத தராசு பாவிக்கிறார்கள் எனவும் அதனை மேற்பார்வை செய்ய வேண்டும் எனவும் அளவெட்டி இந்து மயானம் துப்பரவு செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் கூறுகையில் சந்தையினை துப்பரவு செய்வதற்கு ஒரு தொழிலாளி நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் சந்தையில் புதிதாக கட்டப்பட்ட மலசலகூட பூட்டுகள் வெட்டப்பட்டு இருப்பதையும் நான் நேரில் சென்று அவதானித்திருந்தேன் என்றும் சந்தைக்கு முன்னால் பொது மக்களால் அதிகளவிலான கழிவுகள் கொட்டப்பட்டு வருகின்றது என்றும் கௌரவ உறுப்பினர்கள் தாங்களும் அவற்றினை கவனித்துக்கொள்ளுமாறு தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் வன்னியசிங்கம் பிரபாகரன் அவர்கள் அளவெட்டி மகாஜன சபையும் 3 வருடமாக நிர்வாகம் மாற்றப்படாமல் இருக்கிறது எனவுட’சிலை வைக்கின்ற பிரச்சனையில் இன்னும் நிர்வாகம் மாற்றப்படவில்லை எனவும் தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் கூறுகையில் அடுத்த கூட்டத்தில் எந்தெந்த சனசமூக நிலையங்கள் இயங்குகின்றது என்றும் கடைசியாக கூட்டம் நடைபெற்ற திகதியின் விபரத்தை சனசமூக நிலைய உத்தியோகத்தரிடம் பெற்றுத் தருவதாக தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் ஜெகதீஸ்வரி சுதர்சன் அவர்கள் தமது வட்டாரத்தில் கட்டுவன் மேற்கில் உள்ள காணி உரிமையாளர்களில் பெரும்பாலானவர்கள் வெளிநாட்டில் வசிக்கின்றார்கள் எனவும் அதனால் அந்தக் காணிகள் பராமரிக்கப்படாமல் பற்றைக்காணிகளாக உள்ளன. இதனால் டெங்கு நோய் பரவுவதற்கான ஏது நிலை காணப்படுகின்றது எனவும் அவ் வெற்றுக்காணிகளிலும் போக்குவரத்து வீதியில் குப்பைகள் கோழி உரித்த கழிவுகள் கொட்டப்படுகின்றன என்றும் இதனால் அவ்வீதியில் துர்நாற்றம் வீசுகின்றது என்றும் தெரிவித்தார். மேலும் எமது வட்டாரத்தில் பல வீதிகள் புனரமைக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் புனரமைக்கப்படாத வீதிகளின் பெயர்கள் அவற்றின் நீளங்களை முன்னுரிமை அடிப்படையில் வழங்குமாறும் அதனை சபை நிதியில் அல்லது வேறு நிதிகள் கிடைக்கப்பெறும் போது முன்னுரிமை அடிப்படையில் புனரமைப்புச் செய்யலாம் எனவும் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் தர்மலிங்கம் முரளிதரன் அவர்கள் கீரிமலை இந்து மயானத்துக்கு செல்வதற்கு பாதை இல்லை என்றும் கொண்டலடி வைரவர் வீதி புனரமைத்தல் தொடர்பாகவும் கீரிமலை சிறுவர் பூங்கா இயங்காமல் இருப்பதாகவும் தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் தெரிவிக்கையில் கீரிமலை இந்து மயானத்துக்கு பாதை இருப்பதாகவும் குறித்த பாதையானது மோட்டர் கிறேடர் மூலம் துப்பரவு செய்யப்படும் எனவும் கொண்டலடி வைரவர் வீதி புனரமைப்பு செய்வதற்கு உரிய மூலப்பொருட்கள் வேலைத்தளத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார். கீரிமலை சிறுவர் பூங்கா உள்ள இடம் இது வரை காலமும் குருக்களால் வழக்கு தாக்கல்

செய்யப்பட்டிருந்தது என்றும் தற்போது குறித்த வழக்கு முடிவிற்கு வந்துள்ளதாகவும் இந்த வருடம் சிறுவர் பூங்கா அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

- கௌரவ உறுப்பினர் மேகலா திருஞானசம்பந்தர் அவர்கள் கீரிமலை அம்மாச்சி உணவகத்தில் விலைக்கட்டுப்பாடுகள் இல்லாமல் உணவுகள் விற்கப்படுகின்றன எனவும் அங்கே நேர முகாமைத்துவம் பேணப்படுவதில்லை எனவும் அதனை கௌரவ தவிசாளர் அவர்கள் மேற்பார்வை செய்து ஒழுங்குபடுத்துமாறு கேட்டுக்கொண்டார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் கூறுகையில் விலைக்கட்டுப்பாட்டுடன் தான் பொருட்கள் விற்பனை செய்யப்படல் வேண்டும் எனவும் தான் அதனை அவதானிப்பதாகவும் தெரிவித்தார். கௌரவ உறுப்பினர் அவர்கள் பெண்கள் குழுவில் உள்ள படியாலும் அந்த வட்டாரத்தில் குடியிருப்பாளராகவும் இருப்பதனால் சுய தொழில் செய்ய விரும்பும் பெண்களை அதில் ஈடுபட வைத்து விலைக்கட்டுப்பாட்டை நிர்ணயம் செய்வதற்கு மற்றும் காலை 6.00 மணிக்கு முதல் மாலை 7.00 வரை திறப்பதற்கும் ஏற்பாடு செய்து தருவதாகவும் கூறினார்.
- கௌரவ உறுப்பினர் ஐயாத்துரை மதூசன் அவர்கள் 17ம் வட்டாரத்தில் உள்ள கலைச்செல்வி சனசமூக நிலையத்தால் 2009ம் ஆண்டு பொது நோக்கு மண்டபம் கட்டுவதற்காக காணி ஒன்று பிரதேச சபைக்கு வழங்கப்பட்டது என்றும் இன்று வரை 15 வருடங்கள் கடந்தும் தற்போது வரை அபிவிருத்தி செய்யப்படாமல் பற்றைக்காணியாக இருக்கின்றது எனவும் அதனால் மக்களிடமிருந்து பல முறைப்பாடுகள் வந்த வண்ணம் உள்ளன ஆகவே அந்தக்காணியினை மக்கள் பயன்படுத்தக்கூடியவாறு செய்து தரும் படி கேட்டுக்கொண்டார். மற்றும் கட்டுப்பிட்டி இந்து மயானம் முழுமையாக துப்பரவு செய்யப்படவில்லை எனவும் அதற்கான பாதையும் பற்றை மூடியுள்ளது கொட்டகைத் தகரமும் கழன்றுள்ளது எனவும் தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் கூறுகையில் 2010 ம் ஆண்டு NELSIP திட்டம் வந்தபோது அந்த கால கட்டத்தில் வீதிகள் புனரமைக்கப்பட்டதால் கட்டடங்களுக்கான அனுமதிகள் கிடைக்கப்பெறவில்லை எனவும் குறித்த காணியினை விளையாட்டுமைதானமாக பயன்படுத்துவதற்கு ஏற்பாடு செய்வதாக தெரிவித்தார். எல்லா இடத்திலும் மயானம் பிரச்சனையாக உள்ளதால் அதற்கு ஒரு குழு உருவாக்கி அதற்கான அபிவிருத்தி வேலைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் தேவச்சந்திரன் வஜிந்தன் அவர்கள் துர்க்காபுரத்தில் 1ம் வாய்க்கால் நக்கணாவத்தை காணப்படுகின்றது என்றும் இவ்வாய்க்காலால் வெள்ளநீர் ஓடுவதில்லை என்றும் வெள்ளநீரானது தேங்கி குடிமனைகளுக்கு செல்கின்றது குளத்தடியில் ஏற்றமாக காணப்படுகின்றது என்றும் அதே போல பெரியதம்பிரான் 2ம் வாய்க்காலாலும் வெள்ளநீர் ஓடுவதில்லை எனவும் தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் கூறுகையில் விவசாய சம்மேளன தலைவரும் இதைபற்றி கூறினார் என்றும் நானும் சென்று பார்வையிட்டேன் அவ் வாய்க்கால் மண்ணினை வழித்து எடுத்து அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாமெனவும் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் சிவசுப்பிரமணியம் சீத்தா அவர்கள் கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் மயானம் தொடர்பாக குறிப்பிடுகிறார்கள். ஆனால் காங்கேசன்துறை இந்து மயானம் இன்னும் விடுவிக்கப்படவில்லை எனவும் முன்னர் பிரதேசசபையில் நடைபெற்ற கூட்டமொன்றில் அதனை புனரமைத்து தருவதாக கூறினார்கள் மற்றும் காங்கேசன்துறையில் உள்ள காணி உரிமையாளர்கள் பெரும்பாலானவர்கள் வெளிநாட்டில் வசிக்கின்றார்கள் எனவும் அதனால் அக் காணிகள் பராமரிக்கப்படாமல் பற்றைக்காணியாகவும் வேலிகள் போடப்படாமலும் உள்ளன. மற்றும் மாங்கொல்லைக்குள் மண் அகழ்வு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டிருகின்றது. வாகனங்களில் வருபவர்களை கேட்டால் கட்டட இடிபாடு ஏற்றிக் கொண்டு செல்வதாகவும் கிராமசேவகரிடம் அனுமதி பெற்றதாகவும் தெரிவித்தார்கள் எனத் தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் கூறுகையில் முதல் கட்டமாக மயானத்தின் பாதையையும் மயானத்தினையும் புனரமைப்பதற்குரிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அதனை முடிவுறுத்துவோம் என்றும் தெரிவித்தார். மற்றும் பற்றையாக உள்ள

காணிகளின் விபரங்களையும் தருமாறும் கூறினார். கட்டட இடிபாடு ஏற்றுவதற்கு கிராமசேவகரிடம் அனுமதி பெறுப்படுவதில்லை எனவும் கனரக வாகனத்தில் கொண்டு செல்வதாயின் பிரதேச சபையின் அனுமதி பெறப்பட்டிருத்தல் வேண்டும் என்றும் தெரிவித்தார்.

- கௌரவ உறுப்பினர் வன்னியசிங்கம் பிரபாகரன் அவர்கள் கொல்லங்கலட்டி பிள்ளையார் கோயில் மணிமண்டபத்திற்கு கட்டட அனுமதி தங்களால் வழங்கப்பட்டுள்ளதா என கௌரவ தவிசாளர் அவர்களிடம் வினவினார்.
- கௌரவ தவிசாளர் கொல்லங்கலட்டி மணிமண்டபத்திற்கு கட்டட அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும் காணி கோயிலுக்கு உரிய காணி என்றும் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் வன்னியசிங்கம் பிரபாகரன் தையிட்டி புத்தவிகாரை காணிக்கு இதுவரை காலமும் வழக்கு போடப்படவில்லை என்றும் தற்போது விகாரைக்கு பொது மக்கள் சென்று வருவதனால் சட்டவிரோத விகாரை என்று வழக்கு போடலாம் என தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் தையிட்டி காணி தற்பொழுதும் உயர் பாதுகாப்பு வலயத்தில் இருப்பதாகவும் பொது மக்கள் அனுமதி பெற்று செல்வதாகவும் கூறினார்.
- கௌரவ உறுப்பினர் பத்மநாதன் சாருஜன் அவர்கள் தையிட்டி விகாரை விகாரைக்குரிய காணியில் அல்லாமல் தனியாருக்குரிய காணியில் அமைக்கப்பட்டுள்ளது என்றும் அதனை உடனடியாக நிறுத்த வேண்டுமென 2022ம் ஆண்டு சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இத் தீர்மானத்திற்கு தாங்கள் எடுத்த நடவடிக்கை என்ன என்றும் அதற்கு அனுமதி இன்னும் வழங்கப்படவில்லையா தங்களிடம் அனுமதிக்கு சமர்ப்பித்த காணி உறுதி வேறு ஒரு காணியின் உறுதியாகும் என்றும் தெரிவித்தார். சமூக ஊடகங்களில் விகாரை அமைக்கப்பட்ட காணி உரிமையாளர்களுக்கு மாற்றுக் காணிகள் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மக்கள் தங்களுக்குரிய காணி தான் தங்களுக்கு வேண்டும் என்றும் மாற்றுக்காணிக்கு சம்மதம் தெரிவிக்கவில்லை என்றும் தெரிவித்தார். எமது தொழில்நுட்ப உத்தியோகத்தர்களைக் கொண்டு அளவீடு செய்யுமாறும் கேட்டுக்கொண்டார்.

- கௌரவ தவிசாளர் அவர்கள் இக் காணியானது இன்னும் உயர் பாதுகாப்பு வலயத்தில் இருப்பதாகவும் தெரிவித்தார். முன்னைய தீர்மானம் அதி மேதகு ஜனாதிபதி, கௌரவ பிரதம மந்திரி, விகாராதிபதி, யாழ் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு கடிதம் அனுப்பப்பட்டதென்றும் அக் கடிதம் புத்தசாசன அமைச்சுக்கு நடவடிக்கை எடுக்குமாறு கடிதம் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது நீங்கள் புத்தசாசன அமைச்சுடன் கதைத்தும் இருக்கிறீர்கள். தற்போதைய சபையானது பிரதேச செயலாளரிடம் தையிட்டியில் விகாரை அமைக்கப்பட்ட காணி உயர்பாதுகாப்பு வலயமா அல்லது விடுவிக்கப்பட்ட பிரதேசமா என்று கடிதம் மூலம் கேட்டு அதன் பிறகுதான் எமது உத்தியோகத்தர்கள் சென்று அளவிடமுடியும் என்று தெரிவித்தார் மற்றும் விடுவிக்கப்படாத காணியில் உத்தியோகத்தர்கள் சென்று அளவிடமுடியாது மற்றும் காணி விடுவிக்கப்பட்டால் தான் நாங்கள் வழக்குக்கு தாக்கல் செய்யலாம் என்றும் தெரிவித்தார்.

❖ கௌரவ உறுப்பினர் பென்சமின் தனராஜா அவர்கள் கௌரவ தவிசாளர் அவர்களின் அனுமதியுடன் காலை 11.40 மணிக்கு கூட்ட மண்டபத்தினை விட்டு வெளியேறினார்.

- கௌரவ உறுப்பினர் வன்னியசிங்கம் பிரபாகரன் அவர்கள் பினாக்கை குளத்திற்கு செல்லும் வெள்ளவாய்க்கால் விவசாய திணைக்களத்திற்குரியதென்றும் அது விவசாய திணைக்களத்தினால் புனரமைப்புச் செய்தல் வேண்டும். மழை காலம் வரும் முன்னர் வெள்ளவாய்க்காலினை துப்பரவு செய்யுமாறு நாம் கோர வேண்டும். அல்லது துப்பரவு செய்வதற்கான நிதியினை கோரி எமது சபையினால் துப்பரவு செய்யப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் சபைக்கு சொந்தமான சொத்துகளை தவிர ஏனைய சொத்துக்களை சபைநிதியில் புனரமைப்புச் செய்வது எமது சட்டத்திற்கு முரணானது எனத் தெரிவித்தார்.

- மேலும் கௌரவ உறுப்பினர் வன்னியசிங்கம் பிரபாகரன் எமது பிரதேசசத்தில் மர கூட்டுத்தாபனம் பெருமளவிலான மரங்களை வெட்டி அகற்றி செல்கின்றார்கள் எனவும் ஆனால் வெட்டிய மரங்களிற்கு பதில் மரங்கள் நடப்படுவதில்லை எனவும் தெரிவித்தார்.

- கௌரவ உறுப்பினர் யோசேவ் மரியதாசன் யோசெவ் இதயராஜ் அவர்கள் அளவெட்டி கிழக்கில் உள்ள பொது நோக்கு மண்டபம் உள்ள காணி யாருடையது என்றும் பூங்கா புனரமைப்பு செய்ய வேண்டியுள்ளது மற்றும் தன்னுடைய வட்டாரத்தில் பல வீதிகளும் புனரமைப்புச் செய்யப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் கூறுகையில் செய்ய வேண்டிய வேலைகளை முன்னுரிமை அடிப்படையில் சமர்ப்பிக்குமாறும் வருமானங்கள் கிடைக்கும் போது முன்னுரிமை அடிப்படையில் அபிவிருத்தி செய்யப்படும் எனவும் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் ரொசாந்தகுமார் அவர்கள் பலாலி தெற்கில் நான்கு (04) குடும்பங்கள் காணிக்கு பதிந்து இருக்கின்றார்கள் அவர்களுக்கு கீரிமலையில் காணி கிடைத்திருக்கின்றது என்றும் அவர்களுக்கான வாழ்வாதாரங்கள் எல்லாம் பலாலியில் இருக்கின்றபடியால் அதனால் பலாலி தெற்கில் அரச காணிகள் உள்ளனவாம் அதனை பெற்றுத் தருமாறு கேட்டுக்கொண்டார். பலாலி தெற்கில் 6 குடும்பங்களுக்கு மலசலகூடம் இல்லை என்றும் அங்கும் வீதிகள் புனரமைப்பு செய்யப்படாமலும் காணப்படுகின்றது எனத் தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் கூறுகையில் 6 குடும்பங்களின் பெயர் விபரங்களை கிராம அலுவலரது உறுதிப்படுத்தலுடன் பெற்றுத் தருமாறு தெரிவித்தார்.

❖ கௌரவ உறுப்பினர்களான ஆனந்தராசா உதயசங்கர், துறைராஜா காளிதாஸ் கௌரவ தவிசாளர் அவர்களின் அனுமதியுடன் மதியம் 12.02 மணிக்கு கூட்ட மண்டபத்தினை விட்டு வெளியேறினார்.

- கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் அனைவருக்கும் வணக்கம் கூறி இது எனது 3வது சபை என்றும் தமது வட்டாரத்தில் கடந்த 2022, 2023 காலப்பகுதியில் உள்ளடக்கப்பட்ட வேலைகள் எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை அதனை இந்த முறையாவது செய்து தருமாறு கேட்டுக்கொண்டார்.

➢ கீரிமலை சந்தைக்கடையினையும் மல்லாகம் 6,7 ம் கடையினையும் பின்வரும் விபரப்படி உள்ளூர் கேள்வி அறிவித்தல் மூலம் வழங்குவதற்கு சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

| **விபரம்** | **பரப்பளவு (சதுர அடி)** | **ஆகக் குறைந்த கேள்வித் தொகை (ஒருங் கிணைந்த கட்டுப்பணம்)** | **மாத வாடகை** | **கேள்விப் பத்திர கட்டணம்** | **கேள்வி வைப்பு மீளளிக்கக் கூடியது** |
|---|---|---|---|---|---|
| கீரிமலை சந்தைக்கடை -02 (கண்ணாடியினால் பிரி க்கப்பட்டு அடைக்கப்பட்ட பகுதி) | 392 | 768,000.00 | 3,200.00 | 1,500.00 | 76,800.00 |
| மல்லாகம் சந்தை கடை தொகுதி இல 6 | 162.5 | 840,000.00 | 3,500.00 | 1,500.00 | 84,000.00 |
| மல்லாகம் சந்தை கடை தொகுதி இல 7 | 162.5 | 840,000.00 | 3,500.00 | 1,500.00 | 84,000.00 |

**தீர்மான இல :- 18/2025.06.27.**

கீரிமலை சந்தைக்கடையினையும் மல்லாகம் 6ம் ,7ம் கடையினையும் உள்ளூர் கேள்வி அறிவித்தல் மூலம் வழங்குவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் ரொசாந்தகுமார் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| விபரம் | பரப்பளவு (சதுர அடி) | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (ஒருங் கிணைந்த கட்டுப்பணம்) | மாத வாடகை | கேள்விப் பத்திர கட்டணம் | கேள்வி வைப்பு மீளளிக்கக் கூடியது |
|---|---|---|---|---|---|
| கீரிமலை சந்தைக்கடை -02 (கண்ணாடியினால் பிரி க்கப்பட்டு அடைக்கப்பட்ட பகுதி) | 392 | 768,000.00 | 3,200.00 | 1,500.00 | 76,800.00 |
| மல்லாகம் சந்தை கடை தொகுதி இல 6 | 162.5 | 840,000.00 | 3,500.00 | 1,500.00 | 84,000.00 |
| மல்லாகம் சந்தை கடை தொகுதி இல 7 | 162.5 | 840,000.00 | 3,500.00 | 1,500.00 | 84,000.00 |

- கௌரவ உறுப்பினர் கருணாகரன் கஜகரன் அவர்கள் மல்லாகம் உப அலுவலகத்துக்கு அண்மித்த பகுதியில் காணப்படும் சபையின் கட்டடத்தினை திருத்தி உப நூலகம் ஒன்றினை அமைத்து மக்கள் பயன் பாட்டிற்கு விடலாம் எனவும் அதற்கான நிதி தேவைப்படின் தங்கள் மன்றத்தின் மூலமாக பெற்றுத்தருவதாகவும் தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் கூறுகையில் குறித்த கட்டடம் தற்போது பயன்பாட்டிற்கு ஏற்றதாக இல்லாத காரணத்தினால் அதனை அகற்றி புதிதான கட்டடம் ஒன்றிற்கு மதிப்பீட்டை தயாரிப்பதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்வதாக தெரிவித்தார்.

இத்துடன் கூட்டமானது மதியம் 12.15 மணிக்கு இனிதே நிறைவு பெற்றது.

**சி.சிவானந்தன்**
செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை.
காங்கேசன்துறை

**சோ.சுகிர்தன்**
தவிசாளர்
வலிகாமம் வடக்கு பிரதேச சபை.
காங்கேசன்துறை

தவிசாளர் அவர்களால் 17.07.2025 நடைபெற்ற கூட்டத்தில் சென்ற கூட்ட 27.06.2025 வரைவு அறிக்கையை முன்மொழிந்து வழிமொழியுமாறு கேட்டுக்கொண்ட போது கௌரவ உறுப்பினர்களால் பின்வரும் திருத்தங்கள் தெரிவிக்கப்பட்டன

- கௌரவ உறுப்பினர் துறைராஜா காளிதாஸ் அவர்கள் (27.06.2025) நடைபெற்ற கூட்ட அறிக்கையில் மாவைகலட்டியில் இந்து கோயிலுக்கு பக்கத்தில் வீதியோரமாக மீன் விற்பனை செய்கிறார்கள் அதனை நிறுத்தி, பிரதேச சபை கண்காணிப்பில் உள்ள நீர்த் தாங்கியுள்ள காணியும் பற்றையாக உள்ளது எனவும் அதனை துப்பரவு செய்து அதில் ஒரு பகுதியினை தற்போது மீன் சந்தை அமைப்பதற்கு ஏற்பாடு செய்து தரும்படியும் தெரிவித்தேன் என்றும் கூறியிருந்தார்.

- கௌரவ உறுப்பினர் பாலசுப்பிரமணியம் சிறிதரன் அவர்கள் (27.06.2025) நடைபெற்ற கூட்ட அறிக்கையில் தனது வட்டாரத்தில் வீதிவிளக்குகள் பொருத்த வேண்டியுள்ளது என்றும் பொக்கலாவலை இந்துமயானம் ஒரே பற்றையாக உள்ளது எனவும் துப்பரவு செய்ய வேண்டியுள்ளது மற்றும் சந்தைகளுக்கு அருகில் உள்ள மரக்கறி விற்பனை செய்பவர்களுக்கு கால அவகாசம் கொடுத்து அப்புறப்படுத்துமாறும் தெரிவித்தேன் என்றும் கூறியிருந்தார்.

மேற்படி திருத்தங்களுடன் ஆனி மாதம் 27.06.2025 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த பொதுக்கூட்ட வரைபு அறிக்கை கௌரவ உறுப்பினர் கந்தசாமி மனோகரராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் இராசேந்திரம் மிதுஷன் அவர்கள் வழிமொழிய சபையினால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**சி.சிவானந்தன்**
செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை.
காங்கேசன்துறை

**சோ.சுகிர்தன்**
தவிசாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை.
காங்கேசன்துறை